# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 02 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2024.08.05 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு

**இலங்கையில் உண்மைக்கும் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக் குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளை எடுத்துக்கூறுவதற்கும்; இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக ஆணைக்குழுவின் கண்காணிப்புக் குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*அதிமேதகு சனாதிபதி அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 84.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு

*ச.வ.- ஓ. 63/2024*

**இலங்கையில் உண்மைக்கும் ஒற்றுமைக்கும் நல்லிணக் கத்துக்குமான ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளை எடுத்துக்கூறுவதற்கும்; இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணைக்குழுவின் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்கும் நோக்கத் துக்காக ஆணைக்குழுவின் கண்காணிப்புக் குழுவைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை*

இலங்கையின் அரசியலமைப்பு எல்லா இலங்கையர்களினதும் உள்ளார்ந்த கௌரவம் மற்றும் சமமானதும் பராதீனப்படுத்த முடியாததுமான அடிப்படை மனித உரிமைகள், எல்லா ஆட்களி னதும் சமத்துவத்திற்கானதும் மற்றும் சட்டத்தின்முன் சமமான பாதுகாப்புக்குமான உரிமையும் அத்துடன் அவ்வுரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும் அத்துடன் அவற்றைப் பாதுகாப்பதற்கும் அரசுக்குள்ள கடப்பாடு உட்பட ஏற்றங்கீகரிக்கின்றதாதலாலும்:

அத்துடன் பயனுள்ளவொரு பரிகாரத்துக்காக இலங்கையர்களின் உரிமையின் பிரிக்கமுடியாத பாகமொன்றாகவுள்ளதும் இதன்கண் ஏற்பாடுசெய்யப்பட்ட கருமங்கள் சம்பந்தமான உண்மையை அறிவதற்கு அவர்கள் எல்லோருக்குமுள்ள உரிமையை மையமாகக் கொண்ட, உண்மையைக் கண்டறியும் ஒரு பொறிமுறையானது தேசிய ஒற்றுமை, சமாதானம், சட்டவாட்சி, சகவாழ்வு, சகிப்புத்தன்மையுடனான சமத்துவம் மற்றும் பல்வகைமைக்கு மதிப்பளித்தல் என்பவற்றையும் அத்துடன் இலங்கை மக்களுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் மற்றும் எதிர்காலத் தலைமுறையினருட்பட எல்லா இலங்கையர்களினதும் நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்குமாகச் சுமுகமின்மை மற்றும் வன்செயல் மீள்நிகழாமையையும் ஊக்குவிப்பதற்குப் பங்களிப்புச் செய்யுமாதலாலும்:

அத்துடன் அடிப்படை உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் மதிப்பளித்தலும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட அரச கொள்கையின் நெறிப்படுத்தும் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துதலும் இலங்கை அரசாங்கத்தின் எல்லா உறுப்புக்களினதும் முதனிலைக் குறிக்கோளாகவுள்ளதாதலாலும், பிரதிநிதித்துவச் சனநாயகத்தின் ஒழிக்கமுடியாத குடியரசுசார் கோட்பாடுகளை ஏற்புறுதிசெய்வதற்குப் பயபக்தியாகத் தீர்மானித்தும் மற்றும் இலங்கை மக்களின் அடுத்துவரும் தலைமுறைகளின் கௌரவத்துக்கும் நல்வாழ்வுக்கும் உத்தரவாதமளிக்கும் அருவ மரபுரிமையாக எல்லா மக்களினதும் சுதந்திரம், சமத்துவம், நீதி, அடிப்படை மனித உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்தியும், மற்றும் உண்மையை நாடும் தேசியக் கொள்கையொன்றையும் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் முன்னேற்றியும், அரசியலமைப்பின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சுதந்திரம், சமத்துவம், நீதி, அடிப்படை மனித உரிமைகள் மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் என்பவற்றுக்காக இலங்கையின் எல்லா மக்களுக்குமான அரசின் உறுதிப்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றதனை ஏற்றங்கீகரிக்கின்றதாதலாலும்:

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இச்சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமொன்றாகவரும் தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுறும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியில் நடைமுறைக்குவருதல் வேண்டும்.

## பாகம் I

## இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவைத் தாபித்தல்

*இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத் துக்கான ஆணைக் குழுவைத் தாபித்தல்*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு என அழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, பொது இலச்சினையொன்றைக் கொண்டுள்ள கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன், அதன் கூட்டிணைப்புப் பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினை, ஆணைக்குழுத் தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(4) ஆணைக்குழுவின் இலச்சினை, அவ்வாணைக்குழுவின் தவிசாளரின் கையொப்பத்தின்மூலம் மெய்யென்று உறுதிப் படுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஆணைக்குழு கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டு மென்பதுடன் அதன் அமர்வுகளை இலங்கையில் ஏதேனுமிடத்தில் நடாத்தலாம்.

(6) ஆணைக்குழு, அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பிராந்திய அலுவலகங்களை அமைக்கலாம்.

*ஆணைக் குழுவின் அமைத்துரு வாக்கம்*

**3.** (1) ஆணைக்குழு ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாத மற்றும் இருபத்தொரு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்கள் எல்லோரும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் அமைத்துருவாக்கமானது, பால்நிலையுட்பட இலங்கையின் பன்மைத்துவ இயல்பைப் பிரதிபலித்தல் வேண்டும் என்பதுடன் எல்லா உறுப்பினர்களும் சட்டம், அடிப்படை மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம், வரலாறு, சமூக விஞ்ஞானங்கள், உளவியல், புலனாய்வுகள், மோதலுக்குப்பின்னரான கற்கைகள், நல்லிணக்கம் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான துறைகளில் அவர்களுக்குள்ள அறிவின் மற்றும் செயல்முறை அனுபவத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட நேர்மையும் நம்பகத்தன்மையுமுள்ள ஆட்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான வேறு தகைமைகளையும் கொண்டிருக்கலாம்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு உட்கருதுகின்றவரான அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு உசிதமானவரென எவரேனுமாள் கருதுகின்ற வேறெவரேனும் பொருத்தமான ஆளைப் பெயர்குறித்து நியமிப்பதற்கு விரும்புகின்றவரான அந்த எவரேனுமாள், அவ்வாறு நியமிக்கப்படுவதற்கான அல்லது அத்தகைய வேறு ஆளைப் பெயர்குறித்து நியமிப்பதற்கான அவரது உட்கருத்துப் பற்றித் தெரிவித்து, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அரசியலமைப்புப் பேரவைக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(4) ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) அரசியலமைப்புப் பேரவை, (4) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் விதப்புரைகளைச் செய்வதில், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு உரிய கவனஞ்செலுத்துதல் வேண்டுமென்பதுடன் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கவனத்துட்கொள்ளுதலும் வேண்டும்.

(6) அரசியலமைப்புப் பேரவை, ஆணைக்குழுவின் உறுப்பினர் களிடையேயிருந்து மூவரின் பெயர்களைச் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் வேண்டும்; சனாதிபதி, அவர்களுள் ஒருவரை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பதவிக் காலமும் உறுப்பினர்களைப் பதவியகற்றுதலும்*

**4.** (1) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக் குழுவின் பதவிக்காலம் முடிவடையும் தேதிவரை பதவிவகித்தல் வேண்டும்.

(2) உறுப்பினரொருவரின் பதவி –

(அ) அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல்;

(ஆ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம்மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதன்மேல்;

(இ) (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது அத்தகைய உறுப் பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மேல்; அல்லது

(ஈ) ஆணைக்குழுவின் பதவிக்காலம் முடிவுறு வதன்மீதும் மற்றும் அதன்விளைவாக உறுப்பினரொருவரின் பதவிக்காலம் முடிவு றுவதன் மீதும்,

வறிதாதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் -

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, அல்லது ஏதேனும் மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பின ரொருவராக இருப்பின் அல்லது வரின்;

(ஆ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக்கொண்ட நீதிமன்றமொன்றினால் கடனிறுக்கவகையற்ற ஒருவராகத் தீர்ப்பளிக்கப்படின்;

(இ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக அவரது கடமைகளுடன் அக்கறை முரண்பாடொன்றைக் கொண்டிருப்பவராகக் காணப்படின்;

(ஈ) உளத்தகுதியீனம் அல்லது உடற்றகுதியீனம் காரணமாகப் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராக இருக்கின்றாரென மருத்துவரீதியில் சான்றுப்படுத்தப்படின்;

(உ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக்கொண்ட நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்படின்;

(ஊ) குற்றவியல் தவறொன்றுக்காக ஒரு சட்ட நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படின்;

(எ) ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருப்பின்; அல்லது

(ஏ) மூன்று மாதங்களை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதியொன்றுக்குப் பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கு இயலாதிருப்பின்,

அத்தகைய ஆள் அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன் சனாதிபதியினால் பதவியகற்றப்படலாம்.

(4) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம் 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஆணைக்குழுவின் பதவிக்காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவின் தவிசாளர், சுகவீனம் அல்லது வேறு உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாதிருத்தல் காரணமாக அல்லது அத்தகைய வேறு ஏதேனும் காரணத்தின் நிமித்தம் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், அவர் தனது கடமைகளைப் புரிவதற்கு மீண்டும் இயலுமானவராகும்வரை, அவரது இடத்தில் செயற்படுவதற்கெனச் சனாதிபதி, ஆணைக்குழுவின் வேறு எவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், அவரது இடத்திற் செயற்படுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரைச் சனாதிபதி நியமிக்கும்வரை அத்தகைய பதவியில் செயற்படுவதற்குத் தம்முள்ளிருந்து உறுப்பினரொருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், சுகவீனம் அல்லது வேறு உடற்றகுதியீனம் அல்லது இலங்கையில் இல்லாதிருத்தல் காரணமாக அல்லது அத்தகைய வேறேதேனும் காரணத்தின் நிமித்தம் அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், அத்தகைய உறுப்பினர் அவரது கடமைகளைச் செய்வதற்கு மீண்டும் இயலுமானவராகும்வரை, சனாதிபதி, அவ்வுறுப்பினரின் இடத்தில் செயற்படுவதற்கென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(8) இப்பிரிவின் (6) ஆம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி செய்யப்பட்ட பதில் நியமனங்கள் தொடர்பில், 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(9) ஆணைக்குழுவின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதனது உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

முழுநேர உறுப்பினர்கள்

**5.** ஆணைக்குழுவின் தவிசாளரும் ஆகக்குறைந்தது வேறு மூன்று உறுப்பினர்களும் முழுநேரமாகப் பணியாற்றுதல் வேண்டும். எந்த உறுப்பினர்கள் முழுநேர அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனரோ அந்த உறுப்பினர்களை அரசியலமைப்புப் பேரவை பெயர்குறித்தல் வேண்டும்.

தகவல் அலுவலரும் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரும்

**6.** ஆணைக்குழுவானது, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தினது நோக்கத்துக்காகத் "தகவல் அலுவலரொருவரையும்" "பெயர்குறிக்கப்பட்ட அலுவலரொருவரையும்" நியமித்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் அமர்வுகள்

**7.** (1) ஆணைக்குழு, 12 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் தொடர்பில் தகவல்களையும் விடயங்களையும் பெறுவதற்கான, பெற்றுக்கொள்வதற்கான மற்றும் சேகரிப்பதற்கான அமர்வுகளை 2 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நடாத்துதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, மூன்றுக்குக் குறையாத ஆணைக்குழு உறுப்பினர்களைக் கொண்டுள்ள குழாங்களினாலான புலனாய்வுகளையும் விசாரணைகளையும் பொறுப்பேற்றல் வேண்டும். இவ்வுறுப்பினர்கள், ஆணைக்குழுவின் தவிசாளரினால் குழாங்களுக்குக் குறித்தளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய குழாத்தின் ஓர் உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளரினால் குழாத்தின் தவிசாளராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் எல்லா அமர்வுகளும், (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பகிரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், எல்லா ஆட்களும் அத்தகைய அமர்வுகளுக்குச் சுதந்திரமாக வருகைதருவதற்கு உரித்துடையோராதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, அதன் தற்றுணிபில், விரும்பத்தக்கதென அது கருதுகின்றபோதெல்லாம், பின்வருவனவுட்பட-

(அ) பாலியல் கருமங்கள் தொடர்பான வழக்குநடவடிக்கைகளில்;

(ஆ) தேசிய பந்தோபஸ்துவின் அல்லது பொதுமக்கள் காப்பின் நலன்கருதி;

(இ) எவரேனுமாளின் தனிப்பட்ட பாதுகாப்பின் நலன் கருதி;

(ஈ) அந்தரங்கத்தன்மைக்கு உத்தரவாதமளிக்கும் அல்லது உண்மையைக் கூறுவதற்கு இயலுமான சூழலொன்றை உருவாக்கும் நலன்கருதி;

(உ) ஆணைக்குழுவின் சுற்றுப்புறங்களினுள்ளான ஒழுங்கு மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கான நலன்கருதி; அல்லது

(ஊ) எவையேனும் நடைபெற்றுவருகின்ற அல்லது எதிர்காலச் சட்ட வழக்குநடவடிக்கைகளுக்குப் பங்கமேற்படுத்தும் ஆபத்தொன்று இருக்குமிடத்து,

குறிப்பாக எவரேனுமாளின் தனிப்பட்ட பாதுகாப்பின் நலன்கருதி, அதன் கண்ணுள்ள வழக்குநடவடிக்கைகளில் நேரடியான அக்கறையைக் கொண்டிராதவாறான அத்தகைய ஆட்களை அல்லது தவிர்ப்பது அவசியமானதென ஆணைக்குழு கருதக் கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களை அவற்றிலிருந்து தவிர்க்கலாம்.

(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு, (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக மூடப்பட்ட அமர்வுகளை நடாத்துகின்றவிடத்து அல்லது அவற்றை வெளியிடுவதானது எவரேனுமாளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவிருக்கும் சாத்தியத்தைக் கொண்டிருக்கும் அல்லது தேசியப் பந்தோபஸ்துவுக்கு அல்லது பொதுமக்களின் காப்புக்கு ஒத்திசைவில்லாததாகவிருக்கும் தகவல்களைப் பெறுகின்றவிடத்து அத்தகைய தகவல்கள் அல்லது அவற்றின் ஏதேனும் பாகம் எத்தகைய முறையிலும் பகிரங்கப் படுத்தப்படுதலாகாது என்பதுடன், ஆளெவரும் சொல்லப்பட்ட மூடப்பட்ட வழக்குநடவடிக்கைகளுடன் தொடர்புள்ளவராகவிராத எவரேனும் வேறு திறத்தவருக்கு அத்தகைய தகவல்களை எம்முறையிலும் வெளிப்படுத்துதலுமாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது, எவரேனு மாளின் பாதுகாப்பை அல்லது நலன்களை அல்லது தேசியப் பந்தோபஸ்துவை அல்லது பொதுமக்களின் காப்பைப் பாதுகாப் பதற்கு அவசியமானவாறான அதன் அத்தகைய பாகங்களைத் திருத்தியமைத்த பின்னர் அத்தகைய வழக்குநடவடிக்கைகள் பற்றிய பதிவேடொன்றை வெளியிடலாம்.

(6) ஆணைக்குழுவானது, அவசியமெனக் கருதப்படுகின்ற வாறாக சிங்களம் மற்றும் தமிழ், அல்லது ஆங்கிலத்தில் அதன் வழக்குநடவடிக்கைகளை நடாத்துதல் வேண்டும். ஆணைக் குழுவானது அது அவசியமெனக் கருதுகின்றவாறாக சிங்கள, தமிழ் அல்லது ஆங்கிலத்திலான சமகால உரைபெயர்ப்புக்களை அல்லது மொழிபெயர்ப்புக்களை வழங்குதல் வேண்டும். அவசியமானவிடத்து, ஆணைக்குழுவானது, செவிப்புலக் குறைபாடுடையவர்களும் ஆணைக்குழுவின் வழக்குநடவடிக்கை களில் ஈடுபடுகின்றவர்களுமான ஆட்களுக்கு உதவியளிப் பதற்கென சைகைமொழியை மேலதிகமாகப் பயன்படுத்தலாம்.

(7) ஆணைக்குழுவின் எல்லா வழக்குநடவடிக்கைகளும் எழுத்தில் சொல்லுக்குச் சொல்லாக மற்றும் கேட்பொலி, அல்லது கேட்பொலி – கட்புலப் பதிவுகள் என்றவகையாகப் பதியப்படுதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் கூட்டங்கள்

**8.** (1) ஆணைக்குழுவின் அலுவல்கள் மற்றும் விவகாரங்கள் பற்றிக் கவனத்துட்கொள்வதற்கும் அவற்றைச் சீர்தூக்கிப்பார்ப்ப தற்குமென ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இரு வாரங்களில் ஆகக்குறைந்தது ஒரு தடவையாயினும் கூடுதல் வேண்டும்:

ஆயின், கூட்டமொன்றுக்கு நேரடியாக வருகைதர இயலாதுள்ள எவரேனும் உறுப்பினர் தொலைபேசிமூலம் அல்லது காணொளி இணைப்புமூலம் அல்லது அத்தகைய வேறு தொழினுட்பஞ்சார் வசதிகள்மூலம் அத்தகைய கூட்டங்களில் பங்கேற்கலாம்.

(2) ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் சமுகமளிக்காதிருப்பின் அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள ஆணைக்குழு உறுப்பினர்கள்

அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கெனத் தம்மிடையேயிருந்து ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் கூட்டங்களுக்கான அல்லது அமர்வுகளுக்கான கூட்டநடப்பெண், எப்பட்சத்திலும் ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாதோராகவிருக்கவேண்டிய, ஆணைக்குழுவின் அப்போதைக்கு நியமிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் பெரும்பான்மையாதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் முன்னுள்ள ஏதேனும் கருமம்பற்றிய முடிபொன்று, சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் எடுக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், தனிப்பட்ட வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, கூட்டக்குறிப்புக்களைப் பதியும் நோக்கத்துக்காகப் பேணப்படும் பதிவேடுகளில் அதன் கூட்டங்களின் எல்லா வழக்குநடவடிக்கைகளினதும் கூட்டக்குறிப்புக்கள் பதியப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(6) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவின் கூட்டங்களையும் அமர்வுகளையும் நடாத்துவது தொடர்பான நடவடிக்கைமுறை, அவ்வாணைக்குழுவின் அலுவல்களையும் விவகாரங்களையும் கொண்டுநடாத்துதல் மற்றும் சட்டத்துக்கமைவாக, அதன் அலுவலர்கள் மற்றும் பணியாட்டொகுதியினர் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை முறை என்பவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

ஆணைக் குழுவின் பதவிக்காலம்

**9.** ஐம்பத்தோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவின் பதவிக்காலம் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை ஒரு தடவையில் இன்னும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீடிப்பது அவசியமானதெனச் சனாதிபதி கருதினால், ஆணைக்குழுவின் பதவிக்காலம் அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன் சனாதிபதியினால் நீடிக்கப்படலாம். எவ்வாறாயினும் அத்தகைய நீடிப்பின் கூட்டுமொத்தக் காலப்பகுதி இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான கடமை

**10.** ஆணைக்குழுவானது, அது தாபிக்கப்பட்ட தேதியிலிருந்தும் மற்றும் அது நிலைத்திருக்கும் காலப்பகுதி முழுவதன்போதும் அதனது உளதாந்தன்மைபற்றியும் அதன் குறிக்கோள்கள் பற்றியும் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்குத் தோதான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

ஆணைக்குழு கட்டுப்பாட்டுக்கு அல்லது பணிப்புக்கு அமைந்ததாகவிராது

**11.** ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழான அதன் பணிகளைப் புரிகையில் தன்னாட்சியுள்ள நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அது எவரேனும் ஆளின் அல்லது அதிகாரியின் கட்டுப்பாட்டுக்கு அல்லது பணிப்புக்கு அமைந்ததாதலும் ஆகாது.

பாகம் II

**ஆணைக்குழுவின் குறிக்கோள்களும் பணிப்பாணையும்**

ஆணைக் குழுவின் குறிக்கோள் களும் பணிப்பாணை யும்

**12.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது 1983 முதல் 2009 வரையிலான காலப்பகுதியின்போது அல்லது அதன்பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதலின்போது அல்லது அதனோடு நியாயமானமுறையில் சம்பந்தப்பட்ட அல்லது அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு இலங்கையில் எங்கேனும் விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் சந்தர்ப்பத்தில், உயிரிழப்பு அல்லது அடிப்படை மனித உரிமைகளின் சார்த்துரைக்கப்பட்ட மீறுகை தொடர்பான முறைப்பாடுகள் அல்லது சார்த்துரைகள் அல்லது அறிக்கைகள் தொடர்பில் புலனாய்வு செய்தல் வேண்டும், விசாரணை செய்தல் வேண்டும் மற்றும் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவின் பணிப்பாணையானது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு, உயிரிழப்பு அல்லது சார்த்துரைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை பற்றிய ஓர் உண்மையானதும், செம்மையானதும், நடுநிலையானதும், முழுமையானதுமான பதிவேட்டை நிறுவுவதன்மூலம் இலங்கை மக்களிடையே உண்மையைக் கூறுதல், தேசிய ஒற்றுமை, சமாதானம், சட்டவாட்சி, சகவாழ்வு, சகிப்புத்தன்மையுடனான சமத்துவம், பல்வகைமைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை ஊக்குவித்தல்;

(ஆ) ஏதேனும் எதிர்கால மீள்நிகழாமையைத் தடுப்பதன் நலன்கருதி இயன்றவரை முடியுமானளவுக்கு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதத்துக்கான அல்லது தீங்கிற்கான காரணங்கள், உயிரிழப்பு அல்லது அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை தொடர்பில் புலனாய்வும் மற்றும் விதப்புரைகளைச் செய்தலும்;

(இ) பெண்கள், சிறுவர்கள் மற்றும் இயலாமையுடைய ஆட்களின் அனுபவங்களுக்கு விசேட கவனமளித்து, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு, உயிரிழப்பு அல்லது அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை பற்றிய விபரமொன்றைக் கொடுப்பதற்கு இன்னலுற்ற ஆட்களுக்கான சந்தர்ப்பமொன்றை வழங்குவதன் மூலம் அவர்களின் கௌரவத்தை மீட்டெடுப்பதற்கு உதவுதல்;

(ஈ) நேர்மறையான அனுபவங்களுட்பட இலங்கை மக்கள் உண்மையைக் கூறுவதற்கும் அவர்களின் கதைகளை

எடுத்துச்சொல்வதற்குமான தளத்தையும் வாய்ப்பையும் அவர்களுக்கு வழங்குதல் மற்றும் அவர்களுக்கு அவசியமான பாதுகாப்பையளித்தல்;

(உ) இழப்புக்கான எதிரீடுகளுக்கான அலுவலகத்துக்கு, காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்துக்கு, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்துக்கு மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்ப தற்கான தேசிய அதிகாரசபைக்குக் கருமங்களை ஆற்றுப்படுத்துவதன்மூலம் உட்பட, இன்னலுற்ற ஆட்களுக்கான பயனுள்ள பரிகாரங்களின் வழிவகை களையும் அவர்கள் தொடர்பில் பல்வேறு இழப்புக் கான எதிரீட்டு வழிமுறைகளையும் விதந்துரைத்தல்;

(ஊ) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்து ரைக்கப்பட்ட சேதத்தை அல்லது தீங்கை, உயிரிழப்பை அல்லது சார்த்துரைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளின் மீறுகையைத் தடுப்பதற்கும் அவற்றின் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் எடுக்கப்பட வேண்டிய அல்லது அறிமுகப்படுத்தப்படவேண்டிய நிறுவனரீதியான, நிருவாகரீதியான மற்றும் சட்டவாக்கரீதியான கொள்கை மற்றும் மூலவளக் குறித்தொதுக்கல் என்பன தொடர்பில் விதப்புரை களைச் செய்தல்;

(எ) பின்வருவனவுட்பட, ஆணைக்குழுவின் செயற்பாடுகள், புலனாய்வுகள் மற்றும் விதப்புரைகளின் பரந்துபட்ட விபரமொன்றை வழங்குகின்ற அறிக்கையொன்றைத் தொகுத்தல்:-

(i) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட இன்னலுற்ற ஆட்களின் நேர்மறை அனுபவங் களைப் பதிதலும் மற்றும் ஆட்களுக்கு அல்லது

ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக் கப்பட்ட சேதம் அல்லது தீங்கு அல்லது சார்த் துரைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை மீள்நிகழாதிருப்ப தற்கென அவற்றைப் பயன்படுத்துவதற்கான இயல்திறனும்;

(ii) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு, உயிரிழப்பு அல்லது சார்த்துரைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை எதிர்காலத்தில் மீள்நிகழ்வதனைத் தடுப்பதற்கான வழிமுறை களின்மீதான பொது விதப்புரைகளும் நல்லிணக்கம், பல்வேறு சமுதாயத்தின ரிடையேயான சகவாழ்வு, நல்லாட்சி, நீதி, சட்டவாட்சிக்கான மதிப்பு மற்றும் தண்டனை யிலிருந்தான விடுபாட்டுரிமையை இல்லா தொழித்தல் என்பனவற்றை ஊக்குவித்தல் பற்றிய விதப்புரைகளை அதன்கண் உள்ளடக்குதலும்; அத்துடன்

(iii) பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுட்பட, அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை பற்றிய சார்த்துரைகள் தொடர்பில் ஆணைக் குழுவின் புலனாய்வுகளும் விதப்புரைகளும் மற்றும் அத்தகைய பிரச்சினைகளை எவ்வாறு விளித்துரைப்பது என்பதுபற்றிய விதப்புரை களைச் செய்தலும்;

(ஏ) பின்வருவனவுட்பட (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு தொடர்பில் அல்லது உயிரிழப்புத் தொடர்பில் அல்லது சார்த்துரைக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளின் மீறுகை தொடர்பில் புலனாய்வுசெய்தலும் விதப்புரை களைச் செய்தலும்:-

(i) மனித உயிரை எதேச்சையாகப் பறித்தல் அல்லது அதற்கான ஏதேனும் எத்தனத்தை, நீதிமுறைக்கப்பாற்பட்ட கொல்லுதல்களை, படுகொலைகளை மற்றும் பெருந்தொகையினவான கொலைகளை விளைவிக்கின்ற செயல்கள் அல்லது செய்யாமைகள்;

(ii) சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமான மற்ற அத்துடன் இழிவான நடாத்துகைச் செயல்கள்;

(iii) பெண்கள், சிறுவர்கள், இயலாமைக்குட்பட்ட ஆட்கள், தடுத்துவைக்கப்பட்டோர் மற்றும் கைதிகளின் குறிப்பிட்ட அனுபவங்களுக்கு உரிய கவனஞ்செலுத்தி, ஆட்களின் பாலியல் வன்செயல், துர்ப்பிரயோகம் மற்றும் சுரண்டுகை;

(iv) ஆட்கடத்தல், பணயக்கைதியாக எடுத்தல், வலுக்கட்டாயமான காணாமற்போதல்கள்;

(v) எதேச்சையான அல்லது சட்டமுறையற்ற கைதுசெய்தல்கள் அல்லது தடுத்துவைத்தல்கள்;

(vi) இலங்கையில் ஆயுதந்தாங்கிய படையுறுப்பினர்கள், பொலிசார் மற்றும் சிவில் பாதுகாப்பு ஆளணியினர் உட்பட, ஆட்களின் உயிரிழப்புக்கு அல்லது உயிரிழப்பின் பாரிய ஆபத்துக்குப் பங்களித்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல் தொடர்பாகச் சார்த்துரைக்கப்பட்ட ஊழல் மற்றும் சாதனங்களினதும் நிதிசார் மூலவளங்களினதும் வேண்டுமென்ற பிறழ்பயன்பாடு தொடர்பில் நிகழ்வுகளைக் கண்டறிதல்;

(vii) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதலில் அல்லது அதற்குப்பின்னர் சம்பந்தப்பட்ட ஆயுதந்தாங்கிய குழுக்களுக்குச் சிறுவர்களை ஆட்சேர்த்தல் சம்பவங்கள் தொடர்பில் நிகழ்வுகளைக் கண்டறிதல்;

(viii) இலங்கையினுள் ஆட்களை அல்லது சனத் தொகைகளை வலோத்காரமாக இடமாற்றுதல் அல்லது இடம்பெயர்த்தல் பற்றிய சார்த்துரைகள் தொடர்பில் நிகழ்வுகளைக் கண்டறிதல்;

(ix) தற்காலிகமானதாயினுஞ்சரி அல்லது நிரந்தரமானதாயினுஞ்சரி, எதேச்சையான அல்லது சட்டமுறையற்ற ஆதனப்பறித்தல் பற்றிய சார்த்துரைகள் தொடர்பில் நிகழ்வு களைக் கண்டறிதல்;

(x) மதம், இனம், பால், மூல இடம், அரசியல் அபிப்பிராயம், மொழி அல்லது சாதி என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சமான நடாத்துகை அல்லது தனிப்பட்ட உரிமைகளின் மீறுகைகளுக்கு இட்டுச்சென்றுள்ள செயல்முறைகள் எவையேனுமிருப்பின், அவைபற்றிய நிகழ்வுகளைக் கண்டறிதல்;

(xi) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட மீறுகைகள் மற்றும் துர்ப்பிரயோகங்களுள் எவையும் முறை யியல்சார் குற்றச்செயல்களாகப் புரியப்பட் டனவாவென்பதுபற்றிய நிகழ்வுகளைக் கண்டறிதல்; அத்துடன்

(xii) அத்தகைய கொடுமைகளுக்கு மதியுரை யளித்த, அவற்றைத் திட்டமிட்ட, பணித்த, ஏவிய அல்லது கட்டளையிட்டவர்களுட்பட, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட

சார்த்துரைக்கப்பட்ட மீறுகைகளையும் துர்ப்பிரயோகங்களையும் புரிந்தமைக்குப் பொறுப்பானவர்கள் தொடர்பாக நிகழ்வு களைக் கண்டறிதல்;

(ஐ) சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் மோதல் உருமாற்றம் மற்றும் வாழ்வாதாரப் பயிற்சி வாய்ப்புக்கள் அளிப்பதற்குத் தகைமையுடை யோரினால் அவை வழங்கப்படுவதன்மூலம் பாதிக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு வலுவளிப்ப தற்கான திட்டங்கள் தொடர்பாக விதப்புரைகளைச் செய்தல்;

(ஒ) பின்வருவனவற்றுக்கான அடிப்படைக் காரணங்கள் மீள்நிகழாமை மற்றும் அவற்றை விளித்துரைத்தல் தொடர்பாக விதப்புரைகளைச் செய்தல்:-

(i) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளை விக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு அல்லது உயிரிழப்பு அல்லது அடிப்படை மனித உரிமைகளின் சார்த்துரைக் கப்பட்ட மீறுகை;

(ii) இலங்கையிலுள்ள வெவ்வேறு இன அல்லது மதத் தொகுதியினரிடையே ஏதேனும் மோதல் மீள்நிகழ்வதனைத் தவிர்த்தல்;

(ஓ) இச்சட்டத்தின் குறிக்கோளும் கிடைக்கக்கூடிய மறுவழி பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்; அத்துடன்

(ஔ) ஆணைக்குழுவின் செயற்பாடுகள், புலனாய்வுகள், நடைமுறைப்படுத்துகைகள் மற்றும் விதப்புரைகள் பற்றி பரந்துபட்ட அறிக்கைகளைத் தொகுத்தல்.

## பாகம் III

## ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்

**13.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழு அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் தத்துவங்களுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் பிரயோகிக்கலாம்:- ஆணைக் குழுவின் தத்துவங்கள்

(அ) குறிப்பாக அதன் கட்டமைப்பையும் நிருவாக ஒழுங்கேற்பாடுகளையும் எடுத்துக்கூறி அதன் சொந்த உள்ளக ஒழுங்குவிதிகளையும் நடவடிக்கைமுறைகளையும், வழிகாட்டுநெறிகளையும் தயாரித்தல்;

(ஆ) கடமைகள் மற்றும் பணிகளின் புரிகை சம்பந்தமாக ஆணைக்குழுவின் எல்லாப் பணியாட்டொகுதியினராலும் பின்பற்றப்படவேண்டிய, பால்நிலைசார் கூருணர்வுக் கொள்கைகளை வகுத்தமைத்தலுட்பட வழிகாட்டுநெறிகளை அல்லது துணைச்சட்டங்களை ஆக்குதல்;

(இ) பணியாட்டொகுதியினரின் அமைத்துருவாக்கமானது, பாலுட்பட, இலங்கையின் பன்மைத்துவ இயல்பைப் பிரதிபலிக்கவேண்டிய அப்பணியாட்டொகுதியினரை நியமித்தலும், ஆணைக்குழுவின் பணிக்கு இயைபானவாறு அவர்களுக்குப் பயிற்சிவசதிகளை வழங்குதலும். ஆணைக்குழுவானது, பகிரங்க அலுவலர்களை ஆணைக்குழுவுக்கு மாற்றுச்சேவைக்கு அனுப்பும்படி கோரலாம்;

(ஈ) நற்காரணத்துக்காகப் பணியாட்டொகுதியினரை பதவியிலிருந்து விலக்குதல்;

(உ) ஆணைக்குழுவின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு, இச்சட்டத்திற் குறிப்பாகக் குறிப்பிடப்பட்ட அவ்வலகுகளுக்கும் பிரிவுகளுக்கும் மேலதிகமாகக்

குழுக்களையும், அலகுகளையும் அல்லது பிரிவு களையும் தாபித்தல்;

(ஊ) தேதானவாறும் அவசியமானவாறும் ஆணைக்குழு வினால் நியமிக்கப்பட்ட அத்தகைய குழுக்களுக்கு, அலகுகளுக்கு, பிரிவுகளுக்கு அல்லது தனியாட் களுக்குத் தத்துவங்களைக் கையளித்தல்;

(எ) காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம், இழப்புக்கான எதிரீடுகள்பற்றிய அலுவலகம், தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை மற்றும் தேசியக் சுவடிக்கூடத் திணைக்களம் என்பனவுட்பட, ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான எவரேனுமாளுடன் அல்லது உருவகத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

(ஏ) எவையேனும் மானியக்கொடைகள், கொடைகள் அல்லது அறக்கொடைகள் உட்பட ஆனால் அவை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு வரையறுக்கப்படாமல், ஆணைக்குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கென நிதிகளைத் திரட்டுதல்:

ஆயின், இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட எல்லா நிதிகளும் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தினூடாக நெறிப்படுத்தப்படுதல் வேண்டும்;

(ஐ) வங்கிக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(ஒ) ஆணைக்குழுவின் சொத்துக்களைக் கட்டுப்படுத்தலும், மேற்பார்வை செய்தலும், நிருவகித்தலும்;

(ஓ) ஆணைக்குழுவின் பணியை முன்னேற்றும் நலன்கருதி எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது ஒழுங்கமைப்பிடமிருந்து தொழினுட்ப உதவியை நாடுதல்;

(ஔ) முன்னைய விசாரணை ஆணைக்குழுக்கள் உட்பட, வேறு குழுக்களின் பணியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல்;

(க) இச்சட்டத்தின் சந்தர்ப்பத்தினுள் தேசிய நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு மற்றும் மீள்நிகழாமையின் குறிக்கோளுடன் வழக்குநடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளித்தல்;

(ங) 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கமைய, பகிரங்க அமர்வுகளை நடாத்துதல் மற்றும் ஆணைக்குழு இயன்றதெனக் கருதும்போது ஒன்றில் சமகாலத்தில் அல்லது வேறுவகையாக அதன் வழக்குநடவடிக்கைகளைப் பகிரங்கமாக ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல்;

(ச) 7 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவுக்கமைய, ஆணைக்குழு அவசியமெனக் கருதுமிடத்து மூடப்பட்ட அமர்வுகளை நடாத்துதல்;

(ஞ) ஒரு பூரணத் தரவுத்தளத்தை உருவாக்குதலும் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்ட எல்லா விடயங்களையும் ஆணைக்குழுவின் அறிக்கைகளையும் அத்தகைய தரவுத்தளத்தில் பேணுவதற்கும் வைப்பிடுகையையும் பேணுகையையும் உறுதிப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை எடுத்தலும், அதன்பின்னர் ஆவணக்காப்பு நோக்கத்துக்காக அவற்றைத் தேசியச் சுவடிக்கூடத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தலும்;

(ட) 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு தொடர்பான முறைப்பாடுகளை அல்லது அறிக்கைகளை எவரேனும் இன்னலுற்ற ஆட்களிடமிருந்து பெறுதல்;

(ண) 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு, அல்லது அடிப்படை மனித உரிமைகளின் மீறுகைகள் தொடர்பில் எவையேனும் புலனாய்வுகளை, அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது ஓர் இன்னலுற்ற ஆளினால் அல்லது ஆட்கள் தொகுதியினால் அல்லது ஓர் இன்னலுற்ற ஆளின் அல்லது ஆட்கள் தொகுதியின் சார்பில் செயற்படும் ஆளொருவரினால் அதற்குச் செய்யப்பட்ட ஒரு முறைப்பாட்டின்மீது தொடக்கிவைத்தல்;

(த) அரசாங்க அதிகாரிகளிடமிருந்து அல்லது ஏதேனும் மூலத்திலிருந்து அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் அல்லது தகவல்களைத் தேவைக்கெடுத்தலுட்பட, ஆணைக்குழு அதன் பணிப்பாணையை நிறைவேற்றுவதற்கு இயைபானதென அது கருதக்கூடிய எவையேனும் தகவல்களைச் சேகரித்தலும், ஆவணக் காப்பகத்திலுள்ள விடயங்களின் மற்றும் வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட ஆவணப்படுத்துகையினூடாகவுட்பட, அவசியமானவாறும் அவசியமானபோதும் அத்தகைய விடயங்களைக் காண்பிக்கும்படி கட்டாயப்படுத்துதலும்;

(ந) இலங்கையில் வதிகின்ற எவரேனுமாளை, ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கு அல்லது கேட்புக்கு வருகைதரும்படி, தகவல்களை வழங்கும்படி அல்லது அத்தகைய ஆளின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு வஸ்துவைக் காண்பிக்கும்படி அழைப்பாணைவிடுத்தல்;

(ப) எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான அத்தகைய எல்லா விடயங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் பெறுதலும், ஆணைக்குழு அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய எல்லா ஆட்களையும் நேர்காணலும் அல்லது அத்தகைய ஆட்களின் உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு வஸ்துவைக் காண்பிக்கும்படி அத்தகைய ஆட்களைத் தேவைப்படுத்துதலும்;

(ம) எவரேனும் சாட்சியின் (எழுத்திலாயினுஞ்சரி அல்லது வாய்மொழிமூலமாயினுஞ்சரி) சான்று, சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின்மீது அளிக்கப்படுவதனைத் தேவைப்படுத்துதலும் அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்கும் ஆணைக்குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் சத்தியமொன்று அல்லது உறுதியுரையொன்று எடுத்தோதப்படுதலும் எடுத்தோதப்படுவதனைச் செய்வித்தலும்;

(ய) ஏதேனும் அரச, அரசாங்க, மாகாண அல்லது உள்ளூரதிகாரசபையிலிருந்து அல்லது முகவராண்மையிலிருந்து அல்லது அதன் எவரேனும் அலுவலரிடமிருந்து அதன் பணிப்பாணையை எய்துவதற்கு அவசியமான உதவியைக் கோருதல். வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய எந்த அதிகாரசபைக்கு, முகவராண்மைக்கு அல்லது அலுவலருக்கு உதவிக்கான கோரிக்கையொன்று ஆணைக்குழுவினால் செய்யப்படுகின்றதோ அத்தகைய அந்த அதிகாரசபை, முகவராண்மை அல்லது அலுவலர் அத்தகைய உதவியை உடனடியாக அளித்தல் வேண்டும். அத்தகைய உதவியானது, அத்தகைய அதிகாரசபையின், முகவராண்மையின் அல்லது அலுவலரின் உடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உள்ள தகவல்களை, ஆவணங்களை அல்லது வேறேதேனும் வஸ்துவை அல்லது சென்றுபார்ப்ப

தற்கு அவசியமென ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய இடங்களுக்கான அணுகுகையை உள்ளடக்குதல் வேண்டும், ஆனால் அதற்கு வரையறுக்கப்படுதலாகாது;

(ர) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் உண்மையை நாடுவதற்கான தகவல்களை வெளிப்படுத்துதல், எவரேனுமாளின் உயிருக்கு அல்லது பாதுகாப்புக்கு ஆபத்தொன்றை அல்லது அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்துவதாகவிருக்குமிடத்து, உண்மையை நாடுவதற்காக அத்தியாவசியமாகவுள்ளவிடத்தும் விதிவிலக்கான சூழ்நிலைகளின்கீழும் மட்டுமே எவரேனுமாளிடமிருந்து அந்தரங்கமாகத் தகவல்களைப் பெறுதல்:

ஆயின், இச்சட்டத்தின்கீழான அலுவலகமுறையான பொறுப்புக்களைப் புரிவதிற்றவிர, ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அலுவலரும், சேவையாளரும் அல்லது ஆலோசகரும் அத்தகைய தகவல்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணிக்காத்தலும் பேணிக் காப்பதில் உதவுதலும் வேண்டும்:

ஆயின், மேலும், வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், எவரேனும் ஆளின் ஆளடையாளத்தை வெளிக்காட்டும் தகவல்களை அல்லது அத்தகைய தகவல்களின் ஏதேனும் பாகத்தை அந்தரங்கமாக ஆணைக்குழுவுக்கு வழங்குதல் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் அத்தகைய ஆளின் உயிருக்கு அல்லது பாதுகாப்புக்கு ஓர் ஆபத்தை அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவிருக்குமிடத்து, எவரேனுமாளின் ஆளடையாளத்தை வெளிக்காட்டுவதற்கு ஆணைக்குழுவானது கட்டாயப்படுத்தப்படுதலாகாது;

(ல) (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவையும் எவ்வாறிருப்பினும், எழுத்திலானதாயினுஞ்சரி அல்லது

வாய்மொழிமூலமானதாயினுஞ்சரி, உண்மையை நாடுவதனை வசதிப்படுத்துவதற்கென, குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகளில் ஏல்தகவற்றனவாக இருக்கக்கூடிய எவையேனும் தகவல்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(வ) ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற புலனாய்வுக்கு இயைபான விடயங்களைக் கொண்டுள்ளதெனச் சந்தேகிக்கப்படுகின்ற எவையேனும் வளவுகளைப் பொலிசார் தேடுவதனை இயலச்செய்வதற்கு ஒரு தேடுதல் ஆணையை வழங்குவதற்காக, நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சந்தர்ப்பங்களில், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(வஅ) ஒரு நீதிவானினால் வழங்கப்பட்ட தேடுதல் ஆணையின் அதிகாரத்தின்கீழ் அடையாளங்காணப்பட்ட வளவுகளைத் தேடுதலும் சோதனையிடுதலும் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற ஏதேனும் புலனாய்வுக்கு அவசியமெனக் கருதப்படுகின்ற ஏதேனும் பொருளைப் பரிசோதனை செய்தலும், அதன் பிரதிகளையெடுத்தலும், பிரித்தெடுத்த பகுதிகளை எடுத்தலும், அதனைக் கைப்பற்றுதலும் வைத்திருத்தலும், சித்திரவதைக்காக அல்லது சட்டவிரோதமான தடுத்துவைத்தல் இடங்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடுமெனச் சார்த்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் இடம் கண்டுபிடிக்கப்பட்டுப் பேணிக்காக்கப்படுவதனை உறுதிப்படுத்துதலும். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(வஆ) ஆணைக்குழுவின் புலனாய்வுகளை முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமானவாறாக இலங்கைப் பொலிசாரின் உதவியை நாடுதல்;

(வஇ) புதைகுழிகளை அல்லது புதைகுழித் தொகுதிகளைக் கொண்டனவெனச் சந்தேகிக்கப்பட்ட இடங்களை அகழ்வதற்கு நியாயாதிக்கமுள்ள நீதிவானொருவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தலும் அத்தகைய அகழ்வுகளில் அல்லது தோண்டுதல்களில் அவதானிப்பாளர்களாகச் செயற்படுதலும். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்;

(வஈ) பந்தி (ல) வின் ஏற்பாடுகளுக்கமைய, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ், (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டத்தின்கீழ், 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் (தாபித்தலும் நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின்கீழ் அல்லது இலங்கையின் வேறேதேனும் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்று அல்லது தவறுகள் புரியப்பட்டுள்ளதென அல்லது புரியப்பட்டுள்ளனவென ஆணைக்குழுவுக்குத் தோன்றுமிடத்து, மேற்கொண்ட புலனாய்வுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும் இலங்கையின் இயைபான சட்ட வலுவுறுத்தல் அல்லது குற்றவழக்குத்தொடுக்கும் அதிகாரிகளுக்குக் கருமங்களை ஆற்றுப்படுத்துதல்;

(வஉ) கடல்கடந்த நாடுகளில் கிடைக்கக்கூடிய தகவல்களை அணுகுவதற்கு 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியற் கருமங்களில் பரஸ்பர சட்ட உதவியளித்தல் சட்டத்தின் நியதிகளின்படி வெளிநாட்டு அரசுகளின்

அதிகாரிகளிடமிருந்து ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கத்திடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்;

(வஊ) ஆணைக்குழு அவசியமானதெனக் கருதக்கூடியவாறு அதன் பகிரங்க அமர்வுகளை வசதிப்படுத்துவதற்கும் நல்லிணக்கத்துக்கும் மீள்நிகழாமைக்கும் ஆதரவாக உள்நாட்டு மோதல்களைத் தீர்ப்பதிலும் சமுதாயத் தலைவர்களிடமிருந்தும் ஒழுங்கமைப்புக்களிடமிருந்தும் உதவியை நாடுதல்; அத்துடன்

(வஎ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவின் குறிக்கோள் களையும் பணிப்பாணையையும் எய்துவதற்கு அவசிய மானவாறான அத்தகைய எல்லாக் காரியங்களையும் செய்தல்.

எல்லா ஆட்களும் ஆணைக் குழுவுடன் ஒத்துழைத்தல் வேண்டும்

**14.** அரசாங்க உறுப்பினர்களும் பகிரங்க அலுவலர்களும் அதிகாரிகளும் உட்பட்ட எல்லா ஆட்களும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் குறிக்கோள்களையும் பணிப்பாணையையும் நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவுடனும் அதன் பணியாட்டொகுதி யினருடனும் ஒத்துழைத்தல் வேண்டும்.

பாகம் IV

**ஆணைக்குழுவின் அறிக்கைகளும் விதப்புரைகளும்**

ஆணைக் குழுவின் அறிக்கைகள்

**15.** (1) ஆணைக்குழுவானது, அதன் விதப்புரைகள் உட்பட, அதன் செயற்பாடுகள்பற்றிய பரந்துபட்ட விபரமொன்றைக் கொண்டுள்ள அதன் இறுதி அறிக்கையை 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அதன் பதவிக்காலம் முடிவுறும் தேதிக்குப் பிந்தாமல் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, புலனாய்வுகளின் தொடர்ச்சியான வொரு காலப்பகுதியை அடுத்து, அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்குமுன்னர், ஆணைக்குழுவின் பணியை விபரித்து, விதப்புரைகளுடன் இடைக்கால அறிக்கைகளை ஆண்டுக்கிரு தடவை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இடைக்கால அறிக்கைகள் சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இறுதி அறிக்கையையும் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய இடைக்கால அறிக்கைகளையும் சனாதிபதிக்குச் சமர்ப்பித்ததன் மேல் உடனடியாக, ஆணைக்குழுவானது, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி, தேசியப் பந்தோபஸ்தை பாதிக்கக்கூடிய ஏதேனும் தகவலைப் பிடித்துவைப்பதற்கான தத்துவத்துக்குப் பங்கமின்றி, அத்தகைய எல்லா அறிக்கைகளையும் வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அறிக்கைகளின் அல்லது அவற்றின் சுருக்கங்களின் பிரதிகளைச் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் பொதுமக்களுக்குப் பரந்தளவில் கிடைக்கக்கூடியனவாக்குதலும் வேண்டும். ஆணைக்குழு, ஊடகத்தை மற்றவற்றுக்கிடையே சம்பந்தப்படுத்துவதன்மூலம், அதன் விதப்புரைகளுக்குப் பரந்தளவிலான பிரசித்தத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) 12 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதத்திற்கான அல்லது தீங்கிற்கான அல்லது உயிரிழப்புக்கான அடிப்படைக் காரணங்கள்;

(ஆ) 12 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு அல்லது உயிரிழப்புப் பற்றிய ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள்;

(இ) பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளை விளித்துரைக்கின்ற விதப்புரைகள்;

(ஈ) சிறுவர் போராளிகள் மற்றும் அவர்களின் மீட்பும் மீளொருங்கிணைப்பும் பற்றிய அவதானிப்புக்களும் விதப்புரைகளும்;

(உ) இலங்கையினுள் ஆட்களை அல்லது ஆட்கள் தொகுதிகளை வலோத்காரமாக இடம்பெயர்த்தல் தொடர்பான விதப்புரைகள்;

(ஊ) மீள்நிகழாமைக்கு அவசியமானவையெனக் கருதப் படும், குறிப்பாகக் கல்வி, சுகாதார, கலாசார, நிருவாக மற்றும் நிறுவனரீதியான மறுசீரமைப்புக்கள் என்பன உட்பட, மற்றவற்றுக்கிடையே, சட்ட, அரசியல், சமூகப்-பொருளாதார மறுசீரமைப்புக்களுக்கான விதப்புரைகள்; அத்துடன்

(எ) முன்னுரிமைகளை அடையாளங்காணுகையில் உள-சமூக ஆதரவு உட்பட, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய விதப்புரைகள்.

(5) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இன் நியதிகளின்படி ஆணைக் குழுவின் ஓர் இடைக்கால அறிக்கை அல்லது இறுதி அறிக்கைத் தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களினுள் சனாதிபதி அத்தகைய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் இடுவித்தல் வேண்டும்.

ஆணைக் குழுவின் விதப்புரைகள்

**16.** (1) ஆணைக்குழுவின் விதப்புரைகள், எவரேனுமாளின் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புப் பற்றிய தீர்மானிப் பொன்றாகக் கருதப்படுதலாகாது.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக் குழுவினால், விடயத்துக்கேற்ப, ஒரு புலனாய்வின்போது அல்லது விசாரணையின்போது அல்லது இரண்டின்போதும் சேகரிக்கப் பட்ட விடயங்களின் அடிப்படையின்மீது ஏதேனும் தவறு தொடர்பில் பெயர்குறிக்கப்பட்டவொரு சட்ட நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) பாராளுமன்றம், விடயத்துக்கேற்ப, சனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் இடப்பட்ட ஆணைக்குழுவின் அல்லது ஆணைக்குழுவினது ஒரு குழாத்தின் இடைக்கால அறிக்கைகளில் அல்லது இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விதப்புரைகளை நீதிநெறிக்கவனத்துக்கு எடுக்கலாம் என்பதுடன் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கு அவசியமென அது கருதக்கூடிய அத்தகைய தீர்மானத்தையும் நிறைவேற்றலாம்.

## பாகம் V

## இன்னலுற்ற ஆட்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளைப் பாதுகாத்தல்

*இன்னலுற்ற ஆட்களுக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்பு*

**17.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, இன்னலுற்ற ஆட்களுக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்பு முறைமையொன்றை அபிவிருத்தி செய்து வலுவுறுத்துதல் வேண்டும்.

*இழப்புக்கான எதிரீடுகள்*

**18.** (1) ஆணைக்குழுவானது, அவ்வாணைக்குழுவுடன் ஈடுபாடுகொள்பவர்களும் மற்றும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், பொருள்சார்ந்ததும் குறியீட்டுரீதியானதுமான இழப்புக்கான எதிரீடுகளுக்கு உரித்தானவர்களுமான தனிப்பட்ட இன்னலுற்ற ஆட்களுக்கும் சாட்சிகளுக்கும் அத்தகைய இழப்புக்கான எதிரீடுகளை வழங்கும்படி விதந்துரைத்தல் வேண்டும்; மீளளிப்புக்கு முன்னுரிமை வழங்குதல், நிதிசார் நட்டஈடு, நலன்புரிச் சேவைகள் மற்றும் புனர்வாழ்வு என்பன அத்தகைய இழப்புக்கான எதிரீடுகளினுள் உள்ளடங்கலாம், ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படலாகாது.

(2) ஆணைக்குழு, நல்லிணக்கத்தையும் மீள்நிகழாமையையும் வசதிப்படுத்தும்பொருட்டு கூட்டு இழப்புக்கான எதிரீடுகள் வழங்கப்படவேண்டுமென்றும் விதந்துரைத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, அதனது விதப்புரைகளை இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை என்பனவற்றுக்குட்பட, தோதான அதிகாரிகளுக்கு நெறிப்படுத்தலாம்.

மருத்துவ மற்றும் உள-சமூக ஆதரவு

**19.** ஆணைக்குழு, அதனது வழக்குநடவடிக்கைகளின்போது, இன்னலுற்ற ஆட்களுக்கும் சாட்சிகளுக்கும் மருத்துவ மற்றும் உள-சமூக ஆதரவு தேவைப்படுகின்றனவென்று அது அபிப்பிராயப்படுகின்றபோது —

(அ) இன்னலுற்ற ஆட்களையும் சாட்சிகளையும் வினைத்திறனாகக் கையாள்வதனை இயலச்செய்வதற்கென ஆணைக்குழுவின் எல்லாப் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்குமான உள-சமூகப் பயிற்சியை வழங்குதல்மூலம்;

(ஆ) இன்னலுற்ற ஆட்களுடனும் சாட்சிகளுடனுமான எல்லாப் பகிரங்க அல்லது மூடப்பட்ட அமர்வுகளிலும் அவ்விடத்திற்கேவரும் உள-சமூக உளவளத்துணையாளர்களை ஏற்பாடுசெய்வதன் மூலம்; அத்துடன்

(இ) இன்னலுற்ற ஆட்கள் உளவியல்ரீதியாகத் தயார்நிலையில் உள்ளதனை உறுதிப்படுத்துவதற்கு, பகிரங்க அல்லது மூடப்பட்ட அமர்வுகளுக்குமுன்னர் அவசியமாகின்றவாறாக, இன்னலுற்ற ஆட்களுக்கும் சாட்சிகளுக்குமான உள-சமூக சுருக்க விளக்கங்களையும் விவரமறிதல்களையும் அல்லது மதிப்பீடுகளையும், குறிப்பாகச் சிறுவர்களின், பெண்களின் மற்றும் இயலாமைக்குட்பட்ட ஆட்களின் தேவைகளை விளித்துரைத்து, நடாத்துவதன்மூலம்,

உட்பட, அத்தகைய ஆதரவை வழங்குவதற்கு முன்னுரிமையளித்தலும் அதற்கு வசதியளித்தலும் வேண்டும்.

பாதுகாப்பு வழிமுறைகள்

**20.** (1) ஆணைக்குழு அதனது அபிப்பிராயத்தில் பாதுகாப்பு வழிமுறைகள் தேவையாகவுள்ள இன்னலுற்ற ஆட்களினதும் சாட்சிகளினதும் ஆளடையாளத்தைப் பாதுகாப்பதற்கு அல்லது காப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய பாதுகாப்பு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, சிறுவர்களின் வாக்குமூலங்கள் மூடப்பட்ட வழக்குநடவடிக்கைகளில் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதையும் மற்றும் சிறுவர்களின் ஆளடையாளத்திற்கு இட்டுச்செல்கின்ற தகவல்கள் பகிரங்க எழுத்துப்பிரதிகளிலிருந்து நீக்கப்பட்டு அல்லது திருத்தியமைக்கப்பட்டு அவர்களின் அந்தரங்கத்தன்மை முறையாகப் பாதுகாக்கப்படுகின்றது என்பதையும் குறிப்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு, சிறுவரொருவரினால் அல்லது அவரின் அல்லது அவளின் பாதுகாவலரினால் செய்யப்படும் கோரிக்கையொன்றின்மேல், ஆணைக்குழுவின் முன்னர் நேரடியாகத் தோன்றுவதற்குப் பதிலாக, ஒன்றில் அவரின் அல்லது அவளின் வாக்குமூலத்தின் காணொளிப் பதிவொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கான அல்லது செவிப்புல-கட்புல இணைப்புக்கூடாக ஆணைக்குழுவின்முன்னர் தோன்றுவதற்கான விருப்பத்தெரிவை அத்தகைய சிறுவருக்கு அளித்தல் வேண்டும்.

இன்னலுற்ற ஆட்களுக்கும் மற்றும் சாட்சிகளுக்குமான அணுகுகை

**21.** ஆணைக்குழுவானது, விசேடமாகப் பெண்கள், சிறுவர்கள் மற்றும் இயலாமைக்குட்பட்ட ஆட்களின் தேவைகளை விளித்துரைத்து, இன்னலுற்ற ஆட்களும் சாட்சிகளும் இலகுவாக அணுகுவதனை இயலச்செய்வதற்காக, செயல்முறைக்குகந்த அளவுவரை, அதன் அமர்வுகளை அத்தகைய அமைவிடங்களிலும் அத்தகைய வடிவத்திலும் நடாத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

சாட்சிகளின் பிரயாணத்துக்காக நிதியளித்தல்

**22.** ஆணைக்குழுவானது, அதன் தற்றுணிபின் பேரில், அவ்வாணைக்குழுவால் அழைப்பாணை விடுக்கப்பட்ட சாட்சிகளின் அல்லது ஆட்களின் பிரயாணத்துக்கான நிதிகளை வழங்கலாம்.

**23.** ஆணைக்குழுவுக்குத் தகவல்களை வழங்குகின்ற இன்னலுற்ற ஆட்களுக்கும், சாட்சிகளுக்கும் மற்றும் வேறு தகவலளிப்போருக்கும் ஆணைக்குழுவானது, அவர்களினால் வழங்கப்பட்ட எவையேனும் தகவல்களின் இயல்திறப் பாவனை பற்றியும், அத்துடன் இலங்கையின் இயைபான சட்டவலுவுறுத்தல் அல்லது குற்றவழக்குத்தொடுக்கும் அதிகாரிகளுக்குப் பாரதூரமான குற்றச்செயல்களை அறிக்கையிடுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை மற்றும் நிருவாக நிவாரணத்திற்கான உரிமைக்கோரிக்கைகளை அவர்கள் எந்தப் பொறிமுறைகளுக் கூடாகச் செய்யலாமோ அந்த எவையேனும் பொறிமுறைகளின் கிடைக்கக்கூடியதன்மை என்பனவுட்பட, இயைபான அதிகாரிகளுக்கு கருமங்களை நேரடியாக ஆற்றுப்படுத்துவதற்குள்ள அவர்களின் உரிமைபற்றியும் அறிவித்தல் வேண்டும்.

*மக்களின் உரிமைகள் பற்றி அவர்களுக்கு அறிவிப்பதற்கான கடமையும் அவர்களின் தகவல்களினது இயல்திறப் பாவனையும்*

**24.** ஆணைக்குழு, இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங் களைப் பிரயோகிக்கையில், இன்னலுற்ற ஆட்களினதும், சாட்சி களினதும் மற்றும் வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகள், அந்தஸ்தைக் கருத்திற்கொள்ளாமலும் மற்றும் எத்தகையனவுமான ஏதுக்கள்மீதான பாரபட்சமின்றியும் சமத்துவ அடிப்படையில் வலுவுறுத்தப்பட வேண்டுமென்பதை உறுதிப்படுத்துதல் வேண் டும்.

*பாரபட்சம் இல்லாமல் இன்னலுற்ற ஆட்களினதும் மற்றும் வேறு எவரேனும் ஆளினதும் உரிமைகளை உறுதிப் படுத்து வதற்குள்ள கடமை*

## பாகம் VI

### செயலகமும் பணிப்பாளர் தலைமையதிபதியும்

**25.** ஆணைக்குழு, அதனது அலுவல்களின் நிருவாகத்துக் கான பொறுப்பு பொறுப்பிக்கப்படவேண்டிய செயலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். செயலகமானது, பலியாக்கப்பட்டோ ரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவு, தரவுகள் முகாமைத்துவப் பிரிவு மற்றும் அவசியமென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய வேறு பிரிவு என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

*செயலகம்*

பணிப்பாளர் தலைமையதிபதி

**26.** (1) சனாதிபதி, ஆணைக்குழுவின் கலந்தாலோசனை யுடன், பொருத்தமான கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகளையும் மற்றும் தொழில் அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவரை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமித்தல் வேண்டும்; அவர், செயலகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பது டன், ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு அமைந்தவராக இருத்த லும் மற்றும் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி, ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நற்காரணத்திற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியைப் பதவியகற்றலாம்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வரும் பணிகளுட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், ஆணைக்குழுவின் அலுவல்களினதும் விவகாரங்களினதும் முகாமைத்துவத்துக்கும் நிருவாகத்துக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் அலுவல்களினதும் விவகாரங்களி னதும் அன்றாட முகாமைத்துவம் மற்றும் நிருவாகம்;

(ஆ) ஆணைக்குழுவின் எல்லாப் பதிவேடுகளினதும், ஆவணங்களினதும் மற்றும் விடயங்களினதும் கட்டுக்காப்பையும் பேணிக்காப்பையும் பேணுதல்;

(இ) ஆணைக்குழுவின் சொத்துக்களினது முகாமைத்துவம்; அத்துடன்

(ஈ) காலத்திற்குக்காலம் ஆணைக்குழுவினால் குறித்தளிக் கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கடமைகளைப் புரிதல்.

எல்லாப் பிரிவுகளும் பணிப்பாளர் தலைமை யதிபதியின் நோக்கெல் லையின் கீழ் இருத்தல்

**27.** (1) ஆணைக்குழுவினால் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, செயலகத்தின் எல்லாப் பிரிவுகளும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியின் நோக்கெல்லையின்கீழ் இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய பிரிவுகளின் எல்லா அலுவலர்களும் மற்றும் பணியாட்டொகுதியினரும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வேறுவகையில் முடிபுசெய்யப்பட்டு ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய, ஆணைக்குழுவினால் நியமிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் முழுநேர ஊழியர்களாக இருத்தலும் வேண்டும்.

(3) அத்தகைய எல்லா அலுவலர்களும் மற்றும் பணியாட் டொகுதியினரும், நற்காரணத்துக்காக மாத்திரம் ஆணைக்குழு வினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய எல்லாப் பிரிவுகளின் அலுவலர்களும் மற்றும் பணியாட்டொகுதியினரும், பால்நிலை உட்பட, இலங்கையின் பன்மைத்துவ இயல்பைப் பிரதிபலித்தல் வேண்டும்.

பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவு

**28.** (1) பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது, இன்னலுற்ற ஆட்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான முறைமையொன்றை அபிவிருத்திசெய்து வலுவுறுத்துவதிலும் மற்றும் குறிப்பாக இச்சட்டத்தின் 17, 18, 19, 20, 21, 22, 23 மற்றும் 24 ஆம் பிரிவுகளின்கீழ் ஆணைக்குழுவின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவுக்கு உதவுதல் வேண்டும்.

(2) பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவானது, ஆணைக்குழுவுடன் ஈடுபாடுகொண்டுள்ள எல்லா இன்னலுற்ற ஆட்களினதும் சாட்சிகளினதும் தனிப்பட்ட பாதுகாப்பு, உள-சமூக ஆதரவு மற்றும் உரிமைகளின் பாதுகாப்பு என்பன வழங்கப்படுவதை வசதிப்படுத்துதலும், மற்றும் அத்தகைய ஆட்களினால் கோரப்பட்ட நிருவாக மற்றும் நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கு அல்லது வழங்குவதனை வசதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும்.

(3) பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவானது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினால் முழுமையாக ஆதரவளிக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவானது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, "ஆணைக்குழு" ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புப் பிரிவானது, அது அவசியமெனக் கருதுமிடத்து, சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுடன் ஒருங்கிணையலாம்.

தரவுகள் முகாமைத்துவப் பிரிவு

**29.** (1) ஆணைக்குழுவின் தரவுத்தளத்தை உருவாக்குவதற்கும், பேணுவதற்கும் மற்றும் முகாமைசெய்வதற்கும் பொறுப்பாகவிருக்கவேண்டிய தரவுகள் முகாமைத்துவப் பிரிவொன்று இருத்தல் வேண்டும்.

(2) தரவுகள் முகாமைத்துவப் பிரிவானது அதன் எல்லாத் தரவுத்தளங்களினதும் தரவுகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழினுட்ப இடர்காப்புக்களுட்பட, ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இசைந்தொழுக அவசியமான எல்லாப் படிமுறைகளையும் எடுத்தலும் மற்றும் விடயங்களைத் தேக்கிவைத்தல், பதிவேடுகளைப் பேணிக்காத்தல் மற்றும் தரவுத்தளமொன்றையும் நிறுவனஞ்சார் நினைவகமொன்றையும் பேணுதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுத்தலும் வேண்டும். தரவுகள் முகாமைத்துவப் பிரிவானது எல்லா நேரங்களிலும் அத்தகைய அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அந்தரங்கத்தன்மையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

குறிப்பான பொறிமுறைகளும் மதியுரைநர்களும்

**30.** மேலே பெயரிடப்பட்ட பிரிவுகளுக்கு மேலதிகமாக, ஆணைக்குழுவானது பெண்களினதும், சிறுவர்களினதும், இயலாமைக்குட்பட்ட ஆட்களினதும் மற்றும் பின்தங்கிய குழுவினர்களினதும் அனுபவங்களையும் குறிப்பான தேவைப்பாடுகளையும் விளித்துரைப்பதற்கான குறிப்பான

பொறிமுறைகளையும் நடவடிக்கைமுறைகளையும் மற்றும் அதுபோன்று ஆணைக்குழு தகுதியானவையெனக் கருதுகின்றவாறான குறிப்பான துறைகள், விடயங்கள் அல்லது பிரச்சினைகள் பற்றி அவ்வாணைக்குழுவுக்கு மதியுரையளிப்ப தற்கு இயைபான நிபுணத்துவத்தைக்கொண்ட மதியுரைநர்களையும் நியமிக்கலாம் அல்லது தாபிக்கலாம்.

*ஆணைக்குழு பணிப்புக்களை வழங்கலாம்*

***31.*** ஆணைக்குழுவானது, அது தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, அதன் பிரிவுகளுக்கும் அலகுகளுக்கும் பணிப்புக்கள் மற்றும் அறிவுறுத்தல்களை நேரடியாக வழங்கலாம் அல்லது அவற்றின் மதியுரையை நேரடியாக நாடலாம்.

*மதியுரைக் குழாம்*

***32.*** (1) ஆணைக்குழுவுக்கும், ஆணைக்குழுவின் குழாம்களுக்கும் மற்றும் ஆணைக்குழுவினால் மதியுரைக் குழாத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருமங்கள்மீது செயலகத்துக்கும் மதியுரையளிக்கும் நோக்கத்துக்காக மதியுரைக் குழாமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மதியுரைக் குழாமானது, ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குறைந்தபட்சம் பத்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு மதியுரைக் குழாத்துக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், உண்மை, நல்லிணக்கம், ஒப்புரவு மற்றும் நீதி பற்றிய விழுமியங்களுக்கு எடுத்துக்காட்டப்பட்ட ஈடுபாடொன்றுடன் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நேர்மை, ஒத்துணர்வு, தகுநிலை மற்றும் மதிப்பு என்பவற்றுடனான ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், வேறேதேனும் நியாயாதிக்கத்திலிருந்தான தகுதிவாய்ந்த ஆட்களையும் உள்ளடக்கலாம்.

(3) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் வரைவு இடைக்கால மற்றும் இறுதி அறிக்கைகளைச் சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்குமுன்னர், ஆணைக்குழுவினால் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக மதியுரைக் குழாத்தின் கருத்துரைகள் அல்லது விதப்புரைகளுக்காக அவற்றை அதற்குக் கிடைக்கக்கூடியன வாக்குதல் வேண்டும்.

(4) மதியுரைக் குழாத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியமும் அவர்களின் ஈடுபாட்டு நியதிகளும், ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

## பாகம் VII

## நிதி

*ஆணைக் குழுவுக்கு நிதியளித்தல்*

**33.** அரசானது இச்சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு குறித்தளிக்கப்பட்ட பணிகளை அவ்வாணைக்குழு நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்குப் போதியளவு நிதிகளை அதற்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய நிதிகள் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*தொடக்க மூலதனம்*

**34.** ஆணைக்குழுவானது அதன் பணிக்காகத் தேவைப்பட்ட நிதிசார் மூலவளங்களின் தொடக்க மூலதனமொன்றுடன் தொடங்குதல் வேண்டும்; அத்துடன் இத்தொடக்க மூலதனத்தின் அத்தகைய தொகையானது திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், 35 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

*ஆணைக் குழுவின் நிதியம்*

**35.** (1) ஆணைக்குழு அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் நிதியத்திற்குப் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் தொடக்க மூலதனமாகத் திரட்டு நிதியத்திலிருந்து பெறப்பட்ட பணம்;

(ஆ) ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்:

ஆயின், இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்படும் அத்தகைய நிதிகள் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்திற்கூடாக நெறிப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) 13 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட எல்லா நிதிகளும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைளும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் ஊதியம்

**36.** ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளங்கள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவர்களின் பதவிக்காலங்களின்போது அவை குறைக்கப்படுதலுமாகாது.

ஆணைக் குழுவின் கணக்குகள்

**37.** ஆணைக்குழுவானது அதனது வருமானமும் செலவினமும் மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும். ஆணைக்குழுவின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

ஆண்டறிக்கைகள்

**38.** ஆணைக்குழுவானது, அதனது கணக்குகள் பற்றிய ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அவை சமகாலத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இணையத்தளம் என்பவற்றுக்கூடாக உட்பட வெளியிடப்படுதலும் மற்றும் பொதுமக்களுக்குப் பரப்பப்படுதலும் வேண்டும்.

## பாகம் VIII

## ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல்

ஆணைக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப் படுத்தல்

**39.** ஆணைக்குழுவினால் முதலாவது இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்ட அல்லது இடைக்கால விதப்புரைகள் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், சனாதிபதி, ஆணைக்குழுவின் விதப்புரைகளின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்கும் வசதிப்படுத்துவதற்குமென (இதனகத்துப்பின்னர் "குழு' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கண்காணிப்புக் குழுவொன்றைத்

தாபித்தல் வேண்டும். சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் கலந்தாலோசனையுடன், அக்குழுவின் பதவிக் காலத்தைக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அவசிய மெனக் கருதுகின்றவாறாக அத்தகைய பதவிக்காலத்தைப் புதுப்பிக்கலாம்.

குழுவின் அமைத்துருவாக்கம் முதலியன

**40.** (1) குழுவானது, சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பதினொரு ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர்களுள்-

(அ) ஐந்து பேர் பின்வரும் பதவிவழி உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்:-

(i) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ii) நீதி, சட்டம் மற்றும் ஒழுங்கு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iii) பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(iv) அரசாங்க நிருவாகம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(v) பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவளித்தல் என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது நியமிக்கப்பட்டவர்களும் இலங்கைப் பிரசைகளாக இருக்கவேண்டியவர்களுமான வேறு ஆறு ஆட்கள்.

(2) குழுவின் அமைத்துருவாக்கம், பால் சமநிலை ஒன்றையும், இலங்கையின் பன்மைத்துவ இயல்பையும் பிரதிபலித்தல் வேண்டுமென்பதுடன், குழுவின் எல்லா உறுப்பினர்களும், ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான அறிவு, செயல்முறை அனுபவம் மற்றும் தகைமைகளின் அடிப் படையின்மீது நியமிக்கப்பட்ட நேர்மையும் நம்பகத்தன்மையும் கொண்ட ஆட்களாகவிருத்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மூன்றாண்டுக் காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக் கப்பட்ட உறுப்பினர்களின் ஊதியம் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் பிரிவின் (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் குழுவுக்கான நியமனங்கள் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குழுவானது அதனது பணியை நிறைவேற்றுகையில், அது அவசியமெனக் கருதுகின்றவாறான அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஒழுங்கமைப்புக்கள் அல்லது எவரேனும் ஆளுடன் இணைந்து செயற்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உருவகங்கள் அல்லது ஆள் தேவையான ஆதரவையும் மற்றும் உதவியையும் குழுவுக்கு வழங்குதலும் வேண்டும்.

(7) அரசாங்கம், ஆணைக்குழுவின் விதப்புரைகளினது நடை முறைப்படுத்தலைக் கண்காணிப்பதிலும் வசதிப்படுத்துவதிலும் குழுவின் பொறுப்புடைமைகளைப் பூர்த்திசெய்வதற்குப் போதுமான மூலவளங்களை அக்குழுவுக்கு வழங்குதல் வேண்டும்.

(8) குழுவின் உறுப்பினரொருவரின் பதவி பின்வரும் சந்தர்ப்பங்களில் வறிதாதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியினால் நற்காரணத்துக்காகப் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்;

(ஆ) அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல்;

(இ) அத்தகைய உறுப்பினர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின்மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதன்மேல்; அல்லது

(ஈ) குழுவின் பதவிக்காலம் முடிவடைவதன்மீதும் மற்றும் அதன் விளைவாக உறுப்பினரொருவரின் பதவிக் காலம் முடிடைவதன்மீதும்.

(9) குழுவானது, ஆணைக்குழுவினதும் முன்னைய வேறு விசாரணை ஆணைக்குழுக்களினதும் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முயற்சிகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட வேறு எவரேனுமாளின் அல்லது குழுவின் முயற்சிகளையும் மதிப்பீடுசெய்து, ஆறு மாதங்களுக்கு ஒருதடவை அரையாண்டு அறிக்கைகளைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கைகள் பெறப்பட்டதிலிருந்து இருவாரங்களுக்குப் பிந்தாமல் சனாதிபதி அத்தகைய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும். குழு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அத்தகைய அறிக்கைகளின் பிரதிகளைப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

(10) ஏதேனும் விதப்புரையின் நடைமுறைப்படுத்தலானது முழுமையாக இணங்கியொழுகப்பட்டிராதவிடத்து, குழுவின் அறிக்கைகள், அவ்விதப்புரையை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான ஆட்களினால் அல்லது ஒழுங்கமைப்புக்களினால் வழங்கப்பட்டவாறான நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

பாகம் IX

**பொது**

*ஆணைக்குழு உறுப்பினர்கள் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல்*

**41.** ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் (இச்சட்டத்தின்கீழ் அவர்களது பணிகளின் வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்காக) மற்றும் ஆணைக்குழுவின் அலுவலர்களும் பணியாட்டொகுதி யினரும், (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பகிரங்க அலுவலர் களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்*

**42.** ஆணைக்குழுவானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்தெல்லையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற் கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

*தகவல்கள் தனிப்பட்ட பாவனைக்காகப் பயன்படுத்தப் படுவதனைத் தடைசெய்தல்*

**43.** ஆணைக்குழுவின் உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவின் அலுவலர் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் எவரும், ஆணைக்குழுவில் அத்தகைய உறுப்பினர்கள் பணியின் விளைவொன்றாகப் பெற்றுக்கொண்ட ஏதேனும் அந்தரங்கத் தகவலைத் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு உட்படுத்துதல் அல்லது அத்தகவலிலிருந்து இலாபமீட்டுதல் அல்லது ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக, அல்லது ஆணைக்குழுவின் அலுவலராக அல்லது பணியாட்டொகுதி உறுப்பினராக அவரது பணிகளின்போது தவிர வேறு எவரேனுமாளுக்கு அத்தகைய தகவலை வெளிப்படுத்துதல் ஆகாது. இக்கடப்பாடு ஆணைக் குழுவின் பதவிக்காலம் முடிவடைந்தபின்னரும் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களும் பணியாட்டொகுதியினரும் பக்கச்சார்பின்றி இருத்தல்

**44.** ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லது ஆணைக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரும் நடுநிலையாகவும் அக்கறை முரண்பாடு இல்லாமலும் செயற்படுதல் வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய உறுப்பினர், அலுவலர் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் பக்கச்சார்பு பற்றிய தோற்றப்பாடொன்றை உருவாக்கக்கூடிய அல்லது ஆணைக்குழுவின் நேர்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடிய ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதனைத் தவிர்த்தல் வேண்டும்.

தவறுகள்

**45.**(1) (அ) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அழைப்பாணைகளின் பிரகாரம், காரணமில்லாமல், ஆணைக்குழுமுன்னர் தோன்றுவதற்குத் தவறுகின்ற;

(ஆ) ஆணைக்குழுவினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு, காரணமில்லாமல், பதிலளிக்க மறுக்கின்ற;

(இ) ஆணைக்குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது அவர் தொடர்பில் ஆக்கப்பட்ட அறிவித்தலொன்றின் அல்லது எழுத்திலான கட்டளையொன்றின் அல்லது பணிப்பொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு, காரணமில்லாமல், மறுக்கின்ற அல்லது அவ்வாறு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஈ) அழைப்பாணையொன்று சேர்ப்பிக்கப்படுகின்ற மற்றும் தனது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு வஸ்துவைக் காண்பிப்பதற்கு, காரணமில்லாமல், மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(உ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட தத்துவங்கள் அவ்வலுவலரினால் பிரயோகிக்கப்

படுகையில் அவ்வலுவலரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற;

(ஊ) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களை, கடப்பாடுகளை மற்றும் கடமைகளைப் பூர்த்திசெய்வதில் அல்லது நிறைவேற்றுவதில் அவ்வாணைக்குழுவுக்கு அறிந்துகொண்டே தடங்கல் செய்கின்ற அல்லது முட்டுக்கட்டை யிடுகின்ற;

(எ) ஆணைக்குழுவின் பணியில் முறையற்றவகை யில் செல்வாக்குச் செலுத்துவதை அல்லது தலையீடுசெய்வதை நோக்காகக்கொண்ட ஏதேனும் செயலைப் புரிகின்ற;

(ஏ) ஆணைக்குழுவுடன் ஒத்துழைத்துள்ள அல்லது ஒத்துழைப்பதற்கு உட்கருதுகின்ற எவரேனு மாளை அச்சுறுத்துகின்ற, பயமுறுத்துகின்ற அல்லது முறையற்றவகையில் அவர்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற அல்லது அச்சுறுத்துவதற்கு, பயமுறுத்துவதற்கு அல்லது முறையற்றவகையில் அவர்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு எத்தனிக்கின்ற;

(ஐ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் அந்தரங்கத் தகவலை வெளிப்படுத்துகின்ற;

(ஒ) நியாயமான சாக்கின்றி ஆணைக்குழுவின் வேறேதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஓ) பொய்யான சான்றை அல்லது பொய்யான தகவல்களை வழங்குவதன்மூலம் ஆணைக் குழுவை வேண்டுமென்று பிழைவழியுய்க்கின்ற; அல்லது

(ஔ) 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற,

எவரேனுமாள் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஆளொருவர் அவமதிப்புத் தவறொன்றுக்குக் குற்றவாளியாக உள்ளாரெனத் தோன்றுகின்றவிடத்து, ஆணைக்குழு அத்தகைய விடயத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எதிராகப் புரியப்பட்ட தவறொன்றாக இருந்தது என்றாற்போன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

சாட்சிகளுக்கான விசேட விடுபாட்டுரிமை

**46.** (1) ஆணைக்குழுவின் அல்லது இதன்கீழ் செயற்படுகின்ற அதன் எவரேனும் உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை எதுவும் எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் அரசியலமைப்பின் 126 ஆம் மற்றும் 140 ஆம் உறுப்புரைகளின்கீழான வழக்குநடவடிக்கைகளில் தவிர, கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(2) ஆணைக்குழுவின், ஆணைக்குழுவின் ஒரு குழாத்தின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவையாளரின் ஏதேனும் கட்டளை, முடிபு, செயல் அல்லது செய்யாமை தொடர்பாக அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட எழுத்தாணை நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல.

வழக்குக்கான பாதுகாப்பு

**47.** நாற்பத்தைந்தாம் பிரிவுக்கமைய-

(அ) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினரால் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் அல்லது சேவையாளரால், அத்தகைய உறுப்பினராக அல்லது அலுவலராக

அல்லது சேவையாளராக அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கெதிரான அவமதிப்புக்காகத்தவிர, அவருக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது அத்தகைய அறிக்கைபற்றிய உண்மையான விபரம் வேறெவரேனுமாளினால் வெளியிடப்படுவது தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது; அத்துடன்

(இ) எவரேனுமாள் நல்லெண்ணத்துடன் சான்றை, தகவல்களை அல்லது ஆவணப்படுத்துகையை ஆணைக்குழுவுக்கு வழங்குவதன் விளைவாக அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் அல்லது நிருவாக வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

சான்றெதுவும் ஏல்தகவுடையதாதலாகாது

**48.** ஆணைக்குழுவின் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவிற்கு அல்லது அதன்முன்னர் எவரேனுமாளினால் அளிக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் கூற்றுப்பற்றிய சான்றெதுவும் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்கில், குற்றவழக்கில் அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகளில் அவ்வாளுக்கெதிராக ஏல்தகவுடையதாதலாகாது.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கோரிக்கையின்மேல் ஆணைக்குழு புலனாய்வுகளைப் பின்போடுதல்

**49.** ஆணைக்குழுவின் பணிப்பாணையினுள்ளான ஆளொருவர் அல்லது ஆட்கள் காணாமற்போனமை பற்றிய ஏதேனும் விசாரணையின் விடயத்தில், ஆணைக்குழுவானது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் கோரப்படின், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட விசாரணைகளுடன் ஒத்திசைவில்லாமல் ஆணைக்குழுவானது அத்தகைய புலனாய்வை மீண்டும் தொடங்கக்கூடிய அத்தகைய காலம்வரை, அத்தகைய புலனாய்வைப் பின்போடுதல் வேண்டும்.

விதிகள்

**50.** (1) எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆணைக்குழு ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுவதன்மேல் வலுவுக்குவருதல் வேண்டும்.

ஆணைக்குழுவைக் கலைத்தல்

**51.** (1) ஆணைக்குழுவானது, பதவிக்காலத்தின் முடிவில் அல்லது சனாதிபதிக்கு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின்னர் மூன்று மாதங்களின் முடிவில் கலைக்கப்பட்டதாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு கலைக்கப்படுமுன்னர், ஆணைக்குழுவானது, அந்தரங்கத் தகவல்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாகக்கூடிய வாறான வழிமுறைகளை உரியமுறையில் கவனத்துட்கொண்டு, நிகழ்தகு எதிர்காலக் குறிப்பீட்டுக்காக அதன் பதிவேடுகளை ஆவணக்காப்புச்செய்வதற்குத் தேசியச் சுவடிக்கூடத் திணைக்களத்தின் கலந்தாலோசனையுடன் தோதான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் எஞ்சியுள்ள ஆதனத்தைக் கையுதிர்ப்பதற்கு ஒழுங்குசெய்தலும் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்

**52.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள எவையேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**53.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய — பொருள் கோடல்

"இன்னலுற்ற ஓர் ஆள்" என்பது, பின்வருவோர் எனப் பொருள்படும்:-

(அ) 12 ஆம் பிரிவின்கீழ் விபரிக்கப்பட்ட உயிரிழப்பின் விளைவொன்றாக ஆட்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு அல்லது ஆட்களுக்கு அல்லது ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கு உறப்பட்டுள்ள பலியாக்கப்பட்டவர் ஒருவர்; அல்லது

(ஆ) பந்தி (அ) வின்கீழ் விபரிக்கப்பட்டவொரு பலியாக்கப்பட்டவரின் உறவினர்கள்; ஆயின், அத்தகைய பலியாக்கப்பட்டவர் இறந்தவராக அல்லது 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் வரைவிலக்கணங்கூறப் பட்டவாறான "காணாமற்போன ஓர் ஆளாக" இருத்தல் வேண்டும்;

"சிறுவர்கள்" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆட்கள் எனப் பொருள்படும்;

"ஆட்களுக்கான சேதம் அல்லது தீங்கு" என்பது, உடல்ரீதியான அல்லது உளரீதியான சேதத்தையும் அல்லது தீங்கையும் உள்ளடக்குகின்றது;

"ஆதனத்துக்கான சேதம் அல்லது தீங்கு" என்பது, ஆதனத்தின் அழிவு, சேதம், இழப்பு அல்லது பறிப்பு என்பவற்றையும் உள்ளடக்குகின்றது;

"தேசியச் சுவடிக்கூடத் திணைக்களம்" என்பது, 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசியச் சுவடிக்கூடச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியச் சுவடிக்கூடத் திணைக்களம் எனப் பொருள்படும்;

"குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை" என்பது, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை எனப் பொருள்படும்;

"தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்" என்பது, 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் எனப் பொருள்படும்;

"இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம்" என்பது, 2018 ஆம் ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள்பற்றிய அலுவலகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள்பற்றிய அலுவலகம் எனப் பொருள்படும்;

"காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம்" என்பது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்களுக்கான அலுவலகம் எனப் பொருள்படும்;

"உறவினர்கள்" என்பது, ஓர் இறந்த பலியாக்கப்பட்டவர் அல்லது காணாமற்போன ஆளொருவர் தொடர்பாக, பின்வருவோரையும் உள்ளடக்குகின்றது:-

(அ) வாழ்க்கைத்துணை;

(ஆ) பிள்ளைகள்;

(இ) பெற்றோர்;

(ஈ) சகோதரர் அல்லது சகோதரிமார்;

(உ) மாமனார், மாமியார், மைத்துனர், மைத்துனி மார், மருமகன்மார், மருமகள்மார்;

(ஊ) பேரப்பிள்ளைகள் மற்றும் பாட்டன், பாட்டிமார்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல

**54.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.